## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.194/2004

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 27.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : செங்கோடன் Father's Name : ராமசாமி கவுண்டர்

துவக்க நேரம்: 05.03 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் இந்த தாவாவில் 3 ம் வாதி என்றால் சரிதான். 2 ம் வாதி இளையப்பன் எனது சகோதரர் என்றால் சரி தான். ஏற்கனவே வாதி, பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது என்னை விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே எனது சகோதரர் அளித்த சாட்சியத்தில் விடுபட்ட விஷயங்களை கூற வேண்டிதான் என்னை விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். எனது நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கூறியவை என்றால் சரிதான். எனது வயது என்ன என்றால் 60. ஆனால் நிரூபண வாக்குமூலத்தில் 49 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது.

2. நல்லம்மாள் என்பவர் இளையப்ப கவுண்டரின் பேத்தி என்றால் சரியல்ல மருமகள், ஆனால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பேத்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனது தாத்தா இளையப்ப கவுண்டர், 1 ம் பிரதிவாதி கைலப்ப கவுண்டர், எனது தந்தை ராமசாமி கவுண்டரும் கடந்த 16.02.1950 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் கடந்த 1960 ம் ஆண்டு

எனது தாத்தா இளையப்ப கவுண்டர், 1ம் பிரதிவாதி, 1ம் வாதி மற்றும் எனது தந்தை ராமசாமி ஆகியோர் சேர்ந்து 1960 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனது முதல் விசாரணையில் கூறியுள்ளது தவறு என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தாத்தா இளையப்ப கவுண்டர் இறந்ததற்கான இறப்பு சான்றும், அவரது வாரிசு சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனது அம்மாவிற்கு படிப்பறிவு இல்லை என்பதால் அந்த சான்றுகளை வாங்கவில்லை. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் எனக்கு 3 வயது இருக்கும்போது இறந்ததாக எனது தாயார் கூறினார். எனது தந்தையின் இறப்பு சான்றும், வாரிசு சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அண்ணன் தாக்கல் செய்திருப்பார். மேற்கண்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற விவரம் தெரியும் என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

3. எனது தாத்தா அவருக்கு பிரிந்த பாக சொத்தை எனது பெரியப்பாவிடம் கிரையம் கொடுத்த விபரம் எப்போது தெரியும் என்றால் எனது தாயார் பெரியப்பாவிடமிருந்து கிணறு பாகமும், மற்ற இடத்தையும் கிரையம் வாங்கிய பின்னிட்டு தான் தெரிய வந்தது. இன்றுவரை அந்த கிரையம் செல்லாது என சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதுபோன்று எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை என்றாலும் தற்பொழுது தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதேபோல் எனது பெரியப்பாவிடமிருந்து எனது தாயார் பெற்ற கிரையமும் செல்லாது என்பதற்கான பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்தை 05.05.2003ல் 2ம் வாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தை செல்லாது என்றும் விளம்புகை கோரி பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 ல் எனது தாயார் எனது பெரியப்பாவிடமிருந்து 14 செண்ட் நிலம் கிரையம் பெற்றதாகத்தான் கண்டுள்ளது என்றால் சரியல்ல. 28 செண்ட் நிலத்தை கிரையமாக பெற்றார். நான் சொல்வது தவறு என்றாலும் வா.சா.ஆ.2 ல் 14 செண்டுதான் கிரையம் பெற்றதாக உள்ளது என்றாலும் சரியல்ல. நான் இந்த தாவா சொத்து குறித்து எனது சகோதரர் 2 ம் வாதி மற்றும் எனது தாயாருடன் சேர்ந்து அ.வ.எண்.200/2004 என்ற மற்றொரு வழக்கும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும், 2 ம் வாதியான எனது சகோதரரும் சேர்ந்து தான் மேற்கண்ட வழக்கை நடத்தி வருகிறோம் என்றாலும், ஆனால் தற்பொழுது இந்த வழக்கில் அவருக்கு எதிராக தனது தரப்பில் விடுபட்டுபோன விஷயங்களை நிரப்ப வேண்டி மனு தாக்கல் செய்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. கடந்த 05.05.2003 ல் நானும், எனது சகோதரரான 2 ம் வாதியும் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணமான வா.சா.ஆ.4 ல் 1950 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி எனது தந்தையாருக்கு பிரிந்த சொத்தின் வடபுறத்திலும், தென்புறத்திலும் 4 ம் பிரதிவாதியின் சொத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1 ம் அயிட்ட சொத்து குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியவில்லை எனது தாத்தா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். தாவா 1 ம் அயிட்ட சொத்து குறித்த எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 2 ம் அயிட்ட சொத்தை கடந்த 1962 ல் எனது தாத்தா பெரியப்பாவிற்கு கிரையம் செய்து விட்டதாலும், அதில் 14 செண்டை 1982 ல் கிரையம் பெற்று பின்னிட்டு 2003 ம் ஆண்டு எனது சகோதரரான 2 ம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டதாலும், அந்த ஆவணங்களை அனுசரித்து அவரவர் சுவாதீனத்தில் இருந்து வருவதாலும், அந்த சொத்துக்கள் தொடர்பான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அந்தந்த நபர்கள் மீது மாற்றப்பட்டுள்ளதாலும், வழக்கில் கோரியபடி பரிகாரம் எதுவும் எனக்கோ மற்ற

வாதிகளுக்கோ கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

முடிவு நேரம்: 05.46 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D.Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt.S.Umamaheswari - O.S. No.194/2004 , Dt.27.10.2025.